பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 5உ (19—6—67) திங்கள் ★ வெளியூர்: ஆனி 6உ (20—6—67) செவ்வாய் [இதழ்: 4

எட்டு நாட்கள்!

சென்னை, ஜுன் 19—தமிழகச் சட்டமன்றத்தில் நிதி நிலைத் திட்டத்தின்மீது பொது விவாதம் ஜுன் 19-ல் தொடங்கி 26-ம் நாள் வரை நடத்துவது என்று சட்டமன்ற அலுவல் ஆலோசனைக் குழு முடிவு செய்திருக்கிறது.

மக்கள் தேவைகளை நிறைவேற்றத் தமிழக அரசின் புதிய திட்டம்

முதலமைச்சர் அண்ணா விளக்கம்

"பல துறைகளிலும் மக்களின் தேவைகளை இயன்ற அளவு நிறைவேற்றும் வகையில், இவ்வாண்டின் திட்டத்தினை உருவாக்கியிருக்கிறோம். நாட்டிலே ஒரு புதிய சமுதாய உணர்வை ஊக்குவிக்க, அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் மட்டும் போதா; அவற்றினை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் காட்டும் திறமையும் அக்கறையும் மட்டும் போதாது; சமூகம் முழுவதும் எழுச்சி பெற்று, ஒவ்வொருவரும் தமது பங்கினைச் செலுத்தி, 'புதிய நிலையினை உருவாக்க வேண்டும்' என்ற ஆர்வம் கொள்ளவேண்டும்.

"தமது உழைப்பினை மனமுவந்து ஈந்திட பலப்பல ஆயிரவர் முன்வந்திடின், சமூகம் பெற்றிடக்கூடிய பயன், பெருமை தரத்தக்கதாக அமையும்; 'எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் செலவிட்டதுபோக, மிஞ்சியதில் ஒரு மணி நேரமாகிலும், நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவேன்' என்ற உறுதிகொண்ட சில ஆயிரவர் தமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின், சமூக மேம்பாடு வளருவது உறுதி!

"'இந்த ஆர்வம் கொண்டோர் பல்லாயிரவர் உளர்' என்ற நம்பிக்கையுடன்—துவக்கக் கட்டமாக—மாவட்டத்துக்கு ஆயிரம் பேர் கொண்ட ஒரு 'சீரணி'யை அமைத்திடும் திட்டத்தை மேற்கொள்ள அரசு முடிவுசெய்திருக்கிறது.

"இந்தச் 'சீரணி' எந்தவிதமான ஊதியமும் பெருமல், அரசிடமிருந்து தேவையான கருவிகள்—செயல்படு முறைகள் ஆகியவற்றினை மட்டும் பெற்று, ஏரி—குளங்களைச் செப்பனிடுதல்—பாதைகளைச் சீர்செய்தல்—தரிசுகளை விளைநிலமாக்கிட வழி காணல்—முதியோர் கல்வி போன்ற தொண்டுகளில் தமது ஓய்வுநேரத்தை ஈடுபடுத்தும்.

"தொழில்நுட்பத் துறையின் பல்வேறு பிரிவைச் சார்ந்த அலுவலர்கள், இச் 'சீரணி'க்கு வேண்டிய முறையில் வழிகாட்டித் துணை செய்வர்.

"துவக்கம், மிக எளிய அளவினதாக இருப்பினும், நாட்டுப் பற்றும் பணியாற்றுவதில் ஆர்வமும் கொண்டோரின் பேராதரவு பெருகிப் பெருகி, இச் 'சீரணி' மிகப் பெரிய வெற்றியினை ஈட்டித்தரும் என்பது எனது நம்பிக்கையாகும்."

—முதலமைச்சர் அண்ணா
(நிதிநிலைத் திட்டத்தில்)

சட்டமன்றத்தில்...!

[போகாத நிருபர்]

"என்ன ஐயா; சனிக்கிழமை உங்களை சட்டமன்றத்தின் பக்கமே காணோமே?" என்று மறுநாள் கேட்டார், தொழில் துறை நண்பர் ஒருவர்—வடக்கே உள்ள ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்குத் தென்னகத்துப் பிரதிநிதி!

"சனிக்கிழமையன்று, இருக்கவேண்டிய இடத்தில் இருந்தோம்" என்றேன்.

"புரியவில்லை; புதிராக இருக்கிறதே" என்றார்.

"தெரிந்துகொள்ள வேண்டியதைத்தான தெரிவிக்கிறேன்; உங்களுக்கு அங்கே வேலை; எங்களுக்கு, வெளியே உங்களைப் பற்றிய வேலை. சட்டமன்றத்தை நீங்களெல்லாம் எப்படிப் பார்க்கிறீர்கள் என்பதை நாங்கள் இனி கவனிப்பதாக இருக்கிறோம்."

"எங்களை மட்டுமா கவனிப்பதாக இருக்கிறீர்கள்?" என்று பதறியபடி கேட்டார், அந்தத் தோழர்.

"உங்களை மட்டுமல்ல; நீங்கள் கவனிக்கத் தவறியவை—கவனத்துக்குக் கொண்டுவராதவை—கவனத்தில் படுகிறுற்போல் தெரிவிக்காதவை — இப்படிப்பட்டவைகளையெல்லாம் நான் கவனிக்கப் போகிறேன்!"

"எங்களைக் காட்டிக் கொடுக்காமல் இருந்தால் சரி" என சந்தேகத்துடன் சிரித்தார் அவர்!

"போகாத நிருபராக மாறியிருப்பது, போதாத வசதிகளைக் கொண்டிருப்பதனாலும்தான்! காலத்தோடு முன்னேறுவது ஒரு வகை; காலத்தையே முன்னேற்றிக்கொண்டு செல்வது மற்றொரு வகை; இதில் நாங்கள், இரண்டாவது வகை; எனவே, அதிகமாகப் பயந்துவிடவும் வேண்டாம்—அதே சமயம், எளிதில் எடை போட்டுவிடவும் வேண்டாம்" என அவரையும் தேற்றிவிட்டு, நானும் உள்ளுக்குள் தேற்றிக்கொண்டு, நாளிதழ்களைப் புரட்ட ஆரம்பித்தேன்.

கழகத்துக்கும்—மழைக்கும், எப்போதும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தொடர்புகள் இருப்பதுண்டு!

ஆரம்பக் காலத்தில், 'கண்ணீர்த் துளிகள்' என்று மட்டும் கழகம் அழைக்கப்படவில்லை! ஆரம்பித்த அன்றே கொட்டும் மழையும் வந்தது! பின்னர் நடைபெற்ற முக்கியக் கூட்டங்கள், மாவட்ட மாநில மாநாடுகள் ஆகிய நேரங்களில்கூட, சிறு தூறல் முதல் பெருமழைவரையில் பெய்ததுண்டு!

ஒரு படி அரிசி போட்ட அன்றுகூட, காலைப் பொழுதில், நகரத்தில், மழை பெய்தது!

கழக ஆட்சியின் தனிக் குடித்தனம், கடந்த சனியன்று முதலமைச்சர் அண்ணா வெளியிட்ட நிதிநிலை அறிக்கையிலிருந்துதான் முறையாகத் துவங்குகிறது! அன்று விடியற்காலை முதல் சட்டமன்றம் கூடும் நேரம்வரை கோடைக்காலமாகவே தெரியவில்லை! தட்பநிலை—காலையில் சிறிது மழை—இப்படி, நகரம் குளிர்ந்திருந்தது!

அதற்குச் சரியாக 24 மணி நேரத்திற்கு முன்னர்தான் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியபோது, 'இந்த ஆண்டு பருவ மழையும் சரிவரப் பெய்யுமென நினைக்கிறேன்' என்றும் குறிப்பிட்டிருந்தார்.

பெய்யெனப் பெய்த மழை!

சட்டமன்றக் கூட்டத்தின் மற்றொரு சிறப்பு, குறள் மனம்! அவைத் தலைவர், திருக்குறள் பாடலுடன் மன்றத்தைத் துவக்கி வைத்ததை, பல இதழ்கள், 'இறை வணக்கத்துடன் சபை துவங்கியது' என்று குறிப்பிட்டிருந்தன! என்னவோ—இதை, அவ்வளவு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை! பிரச்சினைக்குரிய பெயரை, ஏன் அதற்குக் கொடுக்கவேண்டும்? முறையான துவக்கம்—மங்கலமான ஆரம்பம்' என்று பொதுவாகக் கூறுவதில் தவறு இல்லையே!

செய்தியாளர்களுக்கு முக்காலமும் தெரியவேண்டும்' என்பார்கள்! பட்ஜெட் கூட்டத்திற்கு முதல் நாளன்று அண்ணா அவர்களைச் சந்தித்த நிருபர்களில் சிலர், இதில் தோல்வியடைந்திருப்பார்கள் என்றே கூறவேண்டும்!

"இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில், சிறப்புகள் என்ன?" என்று கேட்டார்கள் சிலர்.

"அதை நான் வெளியிடுகிறேன்; அதுவே ஒரு சிறப்புதானே?" என்று சூடும் சுவையும் தொனிக்க அண்ணா கூறியதை அப்போது புரிந்துகொள்ளாத சிலர், 'அது ஒன்றும் அப்படிப்பட்ட சிறப்பு இல்லையே' என்று அவசரப்பட்டுச் சொல்லிவிட்டார்கள்!

கேள்வி நேரத்துக்குப்பின் துவங்கி இரண்டு மணி நேரம் அவர் படித்த 'பட்ஜெட்' உரைக்குப் பின்னர்தான் எல்லோரையும் புரிந்துகொள்ளச் செய்தது—'நான் வெளியிடுவதே சிறப்புதான்' என்று அவரும் விரும்பாத—ஆனல், அவரது பதிலில் இருந்த சூட்சுமம் எதிர்த் தரப்பினருக்கு அதிர்ச்சி, வியப்பு அனைத்தையும் கொடுத்தன!

பஸ்கள் தேசியமயமாக்கப்படுவது குறித்து 'பட்ஜெட்' உரை படிக்கப்பட்டபோது, 'ஆளும் கட்சித் தரப்பினர் மட்டும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர்' என்று, 'இந்து' தந்த செய்தியின் காரணம் பலருக்குப் புரிந்திருக்காது!

'சோஷலிசத்தின் முதல் சொந்தக்காரர்கள்' என்று கூறிக்கொள்ளும் காங்கிரசுக்காரர்களுக்கு, பஸ்கள் தேசியமயமாவது அரசியல் அதிர்ச்சியினைக் கொடுத்ததால்தான் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்க முடியவில்லை!

துவக்க நாளன்று, கேள்வி நேரத்தின்போதே, 'பருப்பு வகை போன்ற உணவுப் பொருள்களின் விலைவாசியையும் குறைக்க அரசு உடனடியாக ஆவன செய்துவருகிறது' என்று உணவு அமைச்சர் குறிப்பிட்டது, அண்ணா அவர்கள் அறிவித்த ஒரு படி அரிசித் திட்டத்துக்கு மேலும் மெருகு கூட்டியது!

கேள்வி நேரத்தின்போது காங்கிரசு உறுப்பினர்கள், மதுவிலக்கு பற்றிக் கேட்ட கேள்விகள், அவர்களது அனைத்திந்திய அமைப்பு அக்கொள்கையில் கொண்டிருக்கும் மயக்க நிலையைத்தான் காட்டியது!

நிதிநிலைச் சிக்கல்களுக்கு இடையிலும், மதுவிலக்கில் ஒரு சிறிதும் தளர்ச்சி காட்டாத கழக அமைச்சரவை பற்றி, காந்தீய தர்மத்துக்காகவேனும் 'சபாஷ்' வழங்கவேண்டும் அவர்கள்! ஆனல், அவர்களது 'அணுகுதல்'—'அரசியல் முதல்', எங்கு—எப்போது கிடைக்கும் என்ற போக்கிலேயே இருப்பதாகத் தெரிகிறது.

'அமைச்சர்கள் சம்பளம் வாங்கிவிட்டார்கள் என நிரூபிக்கத் தயார்' என்று மேசையைத் தட்டி மாலை நேர மேடையில் முழங்கியவர்கள் முடங்கிப்போகும் அளவுக்கு, முதல் நாளன்று முதல் அமைச்சர், தெளிவான அறிவிப்பைத் தந்தார்!

'சம்பளம் வாங்காமல் இருக்க எனது அமைச்சர்களைப் பழக்குகிறேன்' என்று சுவைபட முன்பு ஒருமுறை சொல்லிய அண்ணா அவர்கள், மேலவையில், 'கழக அமைச்சர்கள்—சட்டமன்ற அவைத் தலைவர்—துணைத் தலைவர் ஆகியோரின் சம்பளக் குறைப்பினல் அரசுக்கு ஆண்டொன்று ரூ. 61,000 மிச்சமாகிறது எனத் தெரிவித்தார்.

தமிழகச் சட்டமன்றம் இந்தியாவுக்கு மட்டுமல்ல—தென்னகத்துக்குக்கூட ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது என்பதைப் பின்வரும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

முதல் நாளன்று, தமிழகச் சட்டமன்ற மேலவை நடவடிக்கைகளை, மைசூர் சட்டமன்ற மேலவைத் தலைவர், ஆர்வத்துடன் கவனித்தார்!

முதல் நாளன்று கூட்டத்திலேயே ஆந்திர சட்டமன்றத்தில், உறுப்பினர்கள் சிலர் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டார்களாம்!

நாற்பது நாட்கள் நடைபெறப்போகும் தமிழகச் சட்டமன்றக் கூட்டம், இதுவரை இருந்த பெருமையை இனியும் தொடர்ந்து காக்கும் என்ற உறுதி எப்போதும் உண்டு!

அரசினர் சிந்தனையைத் தொடர்ந்து கவரும்

பின்தங்கிய வகுப்பினர் வருமான வரம்பு உயர்வு

"பின்தங்கிய வகுப்பினர் நலன், அரசின் சிந்தையைத் தொடர்ந்து கவர்ந்துவரும் எனச் சொல்லத் தேவையில்லை.

"திட்டத்தில் வகைசெய்துள்ள ரூ. 175 இலட்சம் நிதி ஒதுக்கம் உட்பட, அரிசனங்கள்—பழங்குடியினர் — பின்தங்கிய வகுப்பினர் ஆகியோர் குறித்த திட்டங்களுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் செய்துள்ள மொத்த நிதி ஒதுக்கம் ரூ. 657 இலட்சம் ஆகும்.

அரிசன நலத்துறை வழங்கும் கல்வித் துணைச் சம்பளங்களுக்குரிய (Scholarships) வருமான வரம்பு தற்போது ஆண்டொன்றுக்கு ரூ. 1,500 என்றிருப்பதை, ஆண்டொன்றுக்கு ரூ. 2,000 என்று உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை அறிய இப்பேரவையினர் பெரிதும் உவகை அடைவர் என நினைக்கிறேன்; இதனல் குறிப்பாக மாதச் சம்பளம் பெறும் பெருவாரியான மக்கள், அரிசன நலத்துறை வழங்கும் விடுதி—படிப்புக்குரிய கல்வித் துணைச் சம்பளம் இவற்றைப் பெற முடியாத நிலை நீங்கி அவர்களும் இந்நன்மையைப் பெற வாய்ப்பளிக்கும்.

—நிதி நிலை அறிக்கையில்

சேலம் இரும்பாலை பெறச் செயல்முறைத் திட்டம்

'எல்லாக் கட்சியினரையும் உள்ளடக்கிய கிளர்ச்சிக்கும் ஆயத்தமாவோம்'

நிதி நிலை அறிக்கையில் அண்ணா விளக்கம்

சேலம் இரும்பாலைத் திட்டம் குறித்து மத்திய அரசின் போக்கைச் சுட்டிக்காட்டி, அண்ணா அவர்கள் தமது நிதி நிலையறிக்கை உரையில் குறிப்பிட்டதாவது :—

இந்நாட்டிலும், நார்வே, ஜெர்மனி, ஜப்பான் போன்ற வெளிநாடுகளிலும் உள்ள தொழில்துறை விற்பன்னர்களும், ஆராய்ச்சிக் கூடத்தினரும், 'சேலம் இரும்பாலைத் திட்டம்—மற்ற எந்தத் திட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்த்திடினும்—குறைந்த முதலீட்டில் நிறைந்த ஆதாயம் பெற்றிடத்தக்க நேர்த்தியான ஒன்றாகும்' என்று வலியுறுத்தி பன்முறை கூறியிருப்பதையும், ஒவ்வொரு கட்டத்திலும் மத்திய அரசு, 'சேலம் திட்டம் நிறைவேற்றி வைக்கப்படும்' என்று வாக்களித்தபடி இருந்ததையும், மாநில அமைச்சர்கள், 'திட்டம் வந்திடுமோ வாராதோ என்ற ஐயப்பாடே வேண்டாம்' என்று மக்களிடம் பன்முறை உறுதி கூறி இருப்பதையும் நினைவுபடுத்திக் கொண்டு—இப்போது இது குறித்து மத்திய அரசு, தயக்கமும் தடுமாற்றமும்கொண்ட முறையில் பேசிவருவதைப் பார்க்கும் போது, இம்மாநில மக்கள்வேதனை அடையாமலிருக்க முடியாது.

'சேலமா, விசாகையா, ஆஸ்பட்டா' என்ற புதிய பிரச்சினையை சிக்கலுள்ளதாக்கி எடுத்துக் காட்டப்பட்டபோதுகூட, மாநிலத்துத் தலைவர்கள், 'மூன்று இடங்களிலும் இரும்பாலை துவக்க வசதி செய்திட முடியும்' என்பதனை எடுத்துக்காட்டி, வழியும் கண்டறிந்து கூறினர்.

மிகுதியான மூலதனத்தை 'பொகாரோ' எனும் ஒரே தொழில் அமைப்பில் கொட்டுவதைக் காட்டிலும், அதனை இம்மூன்று திட்டங்களையும் மேற்கொள்ளப் பயன்படுத்துவது முறையாக இருக்கும் என்பதையும் கூறியுள்ளனர்.

திரு. மா. பொ. சி. அவர்கள் தலைமையில், எல்லாக் கட்சி உறுப்பினர்களையும் கொண்ட குழு, இந்தியத் தலைமையமைச்சர்முன் இது குறித்து முறையிட்டுக்கொண்டதனையும் நினைவிற்கொள்ள வேண்டும்.

சேலம் இரும்பாலை துவங்குவதற்குத் தயக்கம் இருப்பதற்குக் காரணம், அந்நியச் செலாவணிச் சிக்கலே என்று மத்திய அரசு வாதாடி வந்துள்ளது. அந்நியச் செலாவணித் துறையிலே உள்ள சிக்கலையும் சிரமத்தையும் இந்த அரசு உணராமல் இல்லை.

ஆனால், சேலம் திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த வாதம் பொருளற்றதாகும். ஏனெனில், இதற்குத் தேவைப்படும் அந்நியச் செலாவணிப் பகுதிப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள ஜப்பான் தொழில் அமைப்பினர் தயாராக உள்ளனர் என்பதை, ஜப்பான் சென்று இது குறித்துக் கருத்தறிந்து வந்து முன்னாள் தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் தெளிவுபடுத்தியுள்ளார்.

சின்னாட்களுக்குமுன், ஜப்பான் தொழில் அமைப்பு விற்பன்னர் சிலருடன் நான் பேசியபோது, இந்த நிலைமை மேலும் உறுதிப்பட்டிருப்பது தெரிந்தது.

ஆகவே, அந்நியச் செலாவணிச் சிக்கலை, சேலம் திட்டத்தை விட்டுவிடுவதற்கோ, தள்ளிப் போடுவதற்கோ காரணமாகக் காட்டுவது முறையாகாது என்பதனை வலியுறுத்த விரும்புகிறேன்.

ஜப்பான் தொழில் அமைப்பினரின் உதவி கிடைத்திடினும், சேலம் திட்டத்திற்காக மேலும் பெருந்தொகை தேவைப்படும்; இன்று மத்திய அரசின் நிதி நிலையில் இது கிடைப்பது கடினம் என்று காரணம் காட்டினும், இந்தத் திட்டத்தினை, மாநில அரசு மேற்கொண்டு நடத்தவேண்டும்—இயலும் என்ற மக்கள் கருத்து வலுவடைந்து வந்திருக்கிறது.

மாநில அரசு, சேலம் இரும்பாலை துவக்கிட அனுமதி கேட்டு அனுப்பிய மனு ஓராண்டுக்கு மேலாக மத்திய அரசிடம் முடங்கிக் கிடப்பது அறிந்து, மக்கள் மேலும் வேதனை அடைந்துள்ளனர்.

சேலம் இரும்பாலை குறித்து மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் போக்கினை, இம்மாநில மக்கள் இனியும் பொறுத்துக்கொண்டிருக்க இயலாத கட்டம் வந்துள்ளதை மத்திய அரசுக்குச் சுட்டிக் காட்டுவதுடன், இது குறித்து, திட்டவட்டமான ஒரு முடிவினைத் தேர்ந்திட வேண்டிய கடமையிலிருந்தும் மத்திய அரசு தவறக்கூடாது என்பதனை எடுத்துக்காட்ட இப்பேரவையின் அனுமதியை வேண்டுகிறேன்.

சேலம் இரும்பாலைத் திட்டத்தை, ஜப்பானிய தொழில் அமைப்பினரின் துணையுடன் துவங்கி நடத்திட—மேற்கொள்ளவேண்டிய முறைபற்றி ஆய்ந்தறிய எல்லாக் கட்சி உறுப்பினர்களும், தொழிற்துறை விற்பன்னரும் கொண்ட ஒரு சிறப்புக் குழு அமைத்திடலாம் என்ற கருத்தும்—தகுதியான காரணம் போதுமான அளவுக்கு இருந்தும், மத்திய அரசு, சேலம் திட்டத்தைப் புறக்கணித்து வந்திடும் போக்கை மாற்றிட, கண்டனம்—கிளர்ச்சி—பதவித் துறப்பு போன்ற முறைகளை உள்ளடக்கிய 'செயல் திட்டம்'—எல்லாக் கட்சியின் ஒத்துழைப்புடன்—மேற்கொள்ளலாம் என்ற கருத்தும் வலுப்பெற்று வருகிறது என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைதியான அரசியல்மூலம் பெறவேண்டிய நீதியை, கிளர்ச்சி மூலம் பெற்றிடும் நிலை விரும்பத்தக்கதல்ல என்றாலும், இம் மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டினை மேலானதாகக் கருத, அதற்காக எந்த இழப்புக்கும் தயாராக இருக்கவேண்டும் என்ற உறுதி கொண்டோர் அனைவரையும், மத்திய அரசின் போக்கு, கிளர்ச்சிப் பாதைக்குத் துரத்துகிறது என்பதனையும் உணர்த்த விரும்புகிறேன்.

தூத்துக்குடித் திட்டம்

ஏறத்தாழ இதேவிதமான அச்சமும் ஐயப்பாடும் கப்பியுள்ள நிலையிலேயே, தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டமும் இருந்திடுவது நமது வருத்தத்தை அதிகமாக்குகிறது.

சின்னாட்களுக்கு முன்பு இதுபற்றி நெல்லை, மதுரை, இராமநாதபுரம் பகுதியிலுள்ள வணிகப் பெருமக்கள், தமது கவலையை என்னி

(3-ம் பக்கம் பார்க்க)

பட்டணத்தில் பக்தவத்சலம்!

சென்னைத் தெருக்கள் ஒரே அல்லோலப்படுகின்றன!

" சிரிப்பு – ஆரவாரம் – கரகோஷம்—இப்படி எங்காவது தென்படுகிறதென்றால், அங்கே, 'பக்தவத்சலம் பேசிக்கொண்டிருக்கிறார்' என்று வைத்துக் கொள்ளுங்கள் " என, காங்கிரசுக்காரர்கள் அறிவிக்கிறார்கள்!

" அவர் தேதி கொடுத்துவிட்டாரா? இல்லையென்றால், வேண்டியதில்லை " என்று, பக்தவத்சலம் வராததால் தள்ளிவைக்கப்பட்டிருக்கும் காங்கிரசுக் கூட்டங்கள் ஏராளமாம்!

ஏற்கனவே ஹாஸ்யமாக அல்லது வீராவேசமாகப் பேசிக் கொண்டிருந்த பல காங்கிரசுக் காரர்களுக்கு, இப்போது 'மலிவு' தோன்றியிருப்பதாகத் தெரிகிறது!

'தாக்கிப் பேசுவதற்கு ஒரு பக்தவத்சலம், என்று, 'பக்தர்கள்' அவருக்குப் பாமாலை சூட்டுகின்றனர்!

அவரேகூட, தனிமையில் வேண்டியவர்களோடு பேசும்போது குறிப்பிடுகிறாராம்—'இதுதான் மக்கள் தொடர்பு என்றால், இந்தக் கலையை முன்னரே கற்றுத் தேர்ந்திருப்பேன்' என்று!

'பேசுவார், பேசுவார்' என்று பார்த்தார்கள்; காமராசரும் கடைசி வரையில் பேசாமலே போய்விட்டார்—புதுடில்லிக்கு! (பேசிய வாழைத் தோட்ட விவகாரமும், 'ஏன் பேசினார்' என்ற கேள்வியை எழுப்பிவிட்டது) எனவே, 'சீசனை'ப் பயன்படுத்திக் கொண்டு பக்தவத்சலம், மேடைப் பேச்சில் நாளுக்கு நாள் முன்னேறி வருகிறார்!

சட்டமன்றத்தில் அவர் 'சிடுசிடு' என்று பேசுவதைஅன்று சட்டமன்றத்தில் பார்த்தவர்கள், இப்போது மாலை நேர மேடைகளில் அவர் பேசுவதைப் பார்க்க வேண்டும்—வயிறு வலிக்கச் சிரிக்கலாம்! அவ்வளவு ஹாஸ்யம்!

'3-D' படங்களைப்போல், அதை நேருக்குநேர் கேட்பவர்கள் தான் உணர முடியும்!

" மதுரையில் முதலமைச்சரை, நிருபர்கள், 'ஒரு படி அரிசித் திட்டம் விஸ்தரிக்கப்படுவது எப்போது?' என்று கேட்டார்கள்; அதற்கு அவர் அடக்கமாக, 'உணவு அமைச்சர் மதியழகனைக் கேளுங்கள்' என்று சொல்லியிருக்கிறார் " (சிரிப்பு)

என்று அவர் சென்னைத் தெரு ஒன்றில் பேசியிருப்பதாகப் பத்திரிகை ஒன்றில் போடப்பட்டிருக்கிறது.

" இதில், சிரிப்பதற்கு என்ன இருக்கிறது ? " என்று பத்திரிகையைப் படித்தவர்கள் கேட்கலாம் ; ஆனால் அவர், கூட்டத்தில் சொல்லிய முறைதான், சிரிப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

எனவே, இதற்கு விளக்கம் பெற அவரது முகத்தைப் பார்த்துக்கொண்டேதான் பேச்சைக் கேட்கவேண்டும் ; அப்போதுதான் ஹாஸ்யத்தின் ஆழத்தைப் புரிந்துகொள்ளலாம் !

அதனால்தான், அவரது மேடைப் பேச்சை, '3-D-யில் பார்க்கவேண்டும் என்று கூறுகிறார்கள்போலும் !

முன்பெல்லாம் காமராசர்கூட, இப்படிப் பேசிவந்தார். அவர் பேசும்போது, முன்னால் இருக்கும் சிறுவர்கள், சிரிப்பார்கள்! அதைப் பார்த்து, மேடையில் இருப்பவர்கள் சிரிப்பார்கள்! 'மேடையில் இருப்பவர்கள் சிரிக்கும்போது நாம் மட்டும் 'உம்' என்று இருந்தால் தலைவர் தவறாக எடுத்துக்கொண்டுவிடுவாரோ' என்றெண்ணி, முன் பகுதியினரும் சிரிப்பார்கள்! இப்படியே அது, கூட்டம் முழுவதும் பரவும்!

ஆனால், பக்தவத்சலத்தின் மேடைப் பேச்சுக்கு எழுவதோ, உண்மையான சிரிப்பு!

" என்ன, இவர்கூட இப்படியெல்லாமா பேசுவது ? அட, கஷ்டமே !" என்று சிரிப்பார்கள் பாதி பேர் !

(3-ம் பக்கம் பார்க்க)

சின்ன விஷயம்

ஆருமில்லா ஊரில் அசுவமேத யாகம்!

'கண் ஊனமானோர் கைப்பொருள் இழப்பார்' என்பது, கண்ணில்லாதவர்களுக்கு இயற்கையாக உள்ள பலவீனத்தைக் குறிக்கும் பழமொழி!

ஆனால், குருடராக இருந்தாலும், அவர்கள் தேடிப் பெற்ற பொருளுக்குத் தீர்வை கட்ட வேண்டும் **இது, சுங்க இலாகா நீதி!**

இந்தச் சுங்க வரி வசூலிக்கும் துறையினர் இருக்கிறார்களே—அவர்கள், கடுகு போகிற இடத்தில் தடி எடுத்துக்கொண்டு திரிவார்கள்! பூசணிக்காய் போகிற இடம் அவர்களுக்குத் தெரியாது!

குருடாகப் பிறந்துவிட்ட பெண் ஒருத்தி—பாவம்—'பிரெய்லி' முறைப்படி படித்து வந்தாள். குருடர் எழுத்தறிவு பெறுவதே ஒரு பெரிய செயல்! அந்தப்பெண்ணுக்கு 'பிரெய்லி' முறையில் குருடர் பயன்படுத்தும் கைக்கடிகாரம் வெளிநாடுகளில் இருப்பதாகத் தெரியவந்ததாம்.

உடனே அந்தப் பெண், 'ராயல் இன்ஸ்டிடியூட்'டுக்கு எழுதித் தனக்கொரு கைக்கடிகாரம் அனுப்ப வேண்டினாள். கடிகாரத்தின் விலை ரூ. 107 என்றும், பணம் அனுப்புமாறும் அந்தக் குருடர் உதவி நிலையம் கடிதம் எழுதியது.

இந்தப் பெண் முறைப்படி ரிசர்வ் பாங்கிக்கு எழுதி, தேவையான அந்நிய செலாவணிக்கு அனுமதியும் பெற்றது.

எல்லாம் முடிந்து ஒரு மாதத்துக்குள் அந்தக் கைக்கடிகாரம் பார்சல்—அஞ்சலில் வந்து விட்டது!

சும்மா விடுமா சுங்கத் துறை?

அவர்களுக்குத் தெரியாமல் கட்டித் தங்கத்தைக் கூடக் கடலில் போட்டுவிடலாம்! தெரிந்து விட்டால், கொழு குத்தக்கூட இடம் கொடுக்க மாட்டார்கள்!

ரூ. 107 மதிப்புள்ள அந்தக் குருடருக்கான கைக்கடிகாரத்துக்குச் சுங்கத் தீர்வை ரூ. 102.35 காசுகள்!

பெண்ணைப் பெற்றவர், பரிதாபமாக அதிகாரியைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்—" ஐயா! தீர்வை விதிக்கும் மற்றப் பண்டங்களைப் போலவா இது? குருடருக்கு ஓர் 'உதவு கருவி' அல்லவா? 'உதவு கருவி'க்குத் தான் தீர்வையிலிருந்து விதிவிலக்கு உண்டே " என்று!

அதிகாரி, கீழ் ஏழுலகம்—மேல் ஏழுலகம் பார்த்துக் கரை கண்ட மாதிரி பேசினாராம்! அவருக்குச் சுங்கத் துறைச் சட்டப் புத்தகந்தான் திருமறை! ஓர் இம்மிகூடப் பிசகமாட்டார்!

செவிடருக்குரிய உதவி கருவி **Hearing Aid** தீர்வையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறபோது, குருடர் மேலும் ஒருபடி அதிக அனுதாபத்துக்கு உரியவர்கள் அல்லவா? மனமுரண்டுக்கு மருந்து ஏது?

கடைசியில் எப்படியோ அதிகாரி பேரம் பேசி, ரூ. 60 தீர்வை கட்டவேண்டும் என்றாராம்.

ரூ. 42.35 அளவில் தீர்வையைக் குறைக்கலாம் எந்த **வேதப் புத்தகம்** அவருக்கு அறிவுரை கூறிற்றோ தெரியவில்லை!

குருட்டுப் பெண்ணைப் பெற்றுக் காலமெல்லாம் வேதனையில் ஆழ்ந்து கிடக்கும் அவர் நெஞ்சத்தை, சுங்கத் துறை கிண்டிப் பார்க்கிறது!

★

இது, அண்மையில் நடந்த நிகழ்ச்சி; இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னே ஒன்று!

5 அல்லது 6 வயதுள்ள பெண் குழந்தை; அதன் பெற்றோர் மலேசியாவில் இருக்கிறார்கள்; சிற்றப்பா தூத்துக்குடியில் இருக்கிறார். குழந்தையை மலேசியாவுக்கு அழைத்துச் செல்லப் பெற்றோர் விரும்பினார்கள். நாகப்பட்டினத்தில் கப்பல் ஏறவேண்டியவர்கள், கப்பல் தகராறினால், சென்னையில் ஏற வந்தார்கள்.

குழந்தையின் சிற்றப்பா—வளர்த்தவர்—குழந்தைக்கு ஆங்கில அரிச்சுவடி போன்ற ஒரு புத்தகத்தைப் பரிசளித்தார். மிஞ்சி மிஞ்சி அதன் மதிப்பு ரூ. 3 அல்லது ரூ. 4 இருக்கும் அதைக் கொண்டுபோகக்கூடாதென்று தடுத்து விட்டார் சுங்க அதிகாரி.

குழந்தை இரும்புக் கம்பிக்கு இந்தப் பக்கம் இருந்து அழுகிறது! சிற்றப்பா அந்தப் பக்கம் இருந்து அழுகிறார்! பார்க்கக் கண்ணராவியாக இருந்தது அந்தக் காட்சி! ஆனால் சுங்க அதிகாரிக்கு மட்டும் மனம் இறங்கவில்லை!

அவர்கள், ஆரும் இல்லாத ஊரில் அசுவமேத யாகம் செய்கிறவர்கள் ஆயிற்றே!

—பூரணன்

பஸ் போக்குவரத்தை அரசுடைமையாக்கும் முதற் கட்டம்

மூன்று விதங்களில் செயல்படுத்தத் திட்டம்

"தமிழக அரசு செயல்படுத்த முற்படும் மற்ருெரு முக்கியக் கொள்கை, பஸ் போக்குவரத்தினை நாட்டுடைமையாக்குவதாகும்" என்று குறிப்பிட்டு முதலமைச்சர் அண்ணு அவர்கள், தமது நிதி நிலை அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது :—

120 மைல்களுக்கும் அதற்கு மேற்பட்டும் உள்ள சில 'நெடுந் தொலை பஸ் வழி'த் தடங்களில் (Long distance routes) தவிர, இப்போது அரசினர் போக்குவரத்துத் துறை பெரும்பாலும், சென்னை மாநகரிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலுமே பஸ்களை நடத்தி வருகிறது. இவை நீங்கலாக, இத்துறை முழுவதும் தனியாருக்கு விடப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்குப் பெரிதும் பயன்படும் ஒரு சிறந்த பணியாகவே சாலைப் போக்குவரத்து உள்ளது. தனியாரின் ஊக்கத்திற்கும், முயற்சிக்கும் முதன்மையிடம் அளிக்கப்பட்டுள்ள நாடுகள் பலவற்றிலும், சாலைப் போக்குவரத்துப் பணியை அந்த நாட்டு அரசும், ஊராட்சி மன்றங்களும் பெரும்பாலும் மேற்கொண்டு செயல்படுத்தி வருகின்றன. நம் நாட்டிலும்கூட, பல மாநில அரசுகள் சாலைப் போக்குவரத்தினை மிகப் பெரும் அளவிற்கு நாட்டுடைமையாக்கியுள்ளன.

மக்கள் தொகை மிக நெருக்கமாகவும் நல்லதொரு சாலை அமைப்பைக் கொண்டதாகவும் உள்ள தமிழகத்தைப் போன்றதொரு மாநிலத்தில் நெடுந்தொலை பஸ் போக்குவரத்து, அரசிற்கு வருமானத்தை ஈட்டித் தரும் முக்கிய ஆதாரமாயிருந்திருக்கவேண்டும். ஆனல், இப்போது நாம் ஆராயத் தேவையற்ற சில காரணங்களுக்காக, சாலைப் போக்குவரத்துப் பணியை நாட்டுடைமையாக்குவதற்கு முனைப்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

வரியில்லா வருமான இனங்களைப் (Non-tax Revenue) பெருக்குவதன் மூலமாகவே மக்களின் வரிச் சுமைகளை நியாயமான எல்லைக்குள் நிற்குமாறு செய்து, வளர்ச்சிப் பணிகளுக்கு மிக அவசியமாகத் தேவைப்படும் நிதி வசதிகளை மேலும் திரட்ட முடியுமென இன்றைய அரசு கருதுகிறது.

"எனவே, 75 மைல்களுக்கும் அதற்கு மேலும் உள்ள பஸ்வழித் தடங்களனைத்தையும் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறை மேற்கொள்ள வேண்டுமென அரசு முடிவுசெய்துள்ளது. இந்த பஸ் வழித் தடங்களின் தற்போதைய அனுமதிச் சீட்டுகள் முடிவடையும் தருணத்தில் அவற்றை அரசு மேற்கொள்ளும்.

தவிர சென்னை மாநகரிலிருந்து தொடங்குகின்ற, அல்லது முடிவுறுகின்ற வழித் தடங்கள் (Routes) அனைத்தையும் தற்போதைய பஸ் வழித்தட அனுமதிச் சீட்டுகள் முடிவடைந்தவுடன் நாட்டுடைமையாக்க வேண்டுமென்றும் அரசு கருதியுள்ளது.

அன்றியும், கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லைகளைத் தொடுகின்ற வழித்தடங்கள் அனைத்தையும், அந்தந்த பஸ் முதலாளிகளின் அனுமதிச் சீட்டுகள் முடிவடையும்போது படிப்படியாக மேற்கொள்வதன் மூலம் அங்கு பஸ் போக்குவரத்தினை நாட்டுடைமையாக்குவதில் முழுமை காண அரசு கருதுகின்றது.

இம்மூன்றுவகை வழித் தடங்களது வளர்ச்சியும், இனி அரசின் தனிப் பொறுப்பாக இருக்கும்.

நடப்பு ஆண்டினைப் பொறுத்தமட்டில் தமிழக அரசு போக்குவரத்துத் துறைக்கு வகைசெய்யப்படும் மூலதன முதலீடான சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்தைக் கொண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்திவிட முடியும்.

இந்தி பேசாத மக்களுக்கு மேலும் வெறுப்பூட்ட வேண்டாம்

நாடாளுமன்ற நடவடிக்கைப் பதிவேடுகள் பற்றி செ. கந்தப்பன்

"நாடாளுமன்ற நடவடிக்கைகளின் பதிவேடுகள் அனைத்தும் ஆங்கிலத்திலும், இந்தியிலும் தனித் தனியாக இருத்தல் வேண்டும்"

என்று, தி. மு. கழக உறுப்பினர் செ. கந்தப்பன், மக்களவையில் வற்புறுத்தினர். அவர் மேலும் தெரிவித்ததாவது :—

"நாடாளுமன்ற நடவடிக்கைகளின் பதிவு ஏடுகளில் ஒரு பக்கத்தில் இந்தியிலும், மறுபக்கத்தில் ஆங்கிலத்திலுமாக அச்சிடப்படுகிறது.

"இந்தி பேசாத பகுதி உறுப்பினர்களுக்கு, அந்தப் பதிவு ஏடுகளைப் புரட்டிப் பார்ப்பதில் சிரமம் ஏற்படுகிறது.

"இந்தி பேசாத பகுதியினரும் இந்தி கற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத் தூண்டத்தான் இப்படிப் புத்தகம் வெளியிடப்படுகிறது என்றுல், அந்த எண்ணம் தவருனதாகும். அந்தக் கருத்து, இந்தி எதிர்ப்பு உணர்ச்சியைத்தான் ஏற்படுத்தும்."

(2-ம் புக்கத்தின் தொடர்ச்சி)

டம் தெரிவித்ததுடன், திட்டமிட்டபடி தூத்துக்குடி துறைமுகத்தை வளப்படுத்துவதற்கு இந்த அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்குத் தமது ஆதரவினை நல்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

தமிழகத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான இந்த இரண்டு திட்டங்களையும் தேய்த்துவிடாமல், முழு அளவில் நிறைவேற்றிக் கொடுக்கும் பொறுப்பினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற இம்முறையீட்டுக்கு, கட்சிக் கண்ணேட்டத்தைக் காட்டிலும் நாட்டின் கண்ணேட்டமே மேலானது என்ற பண்பினை உணர்ந்தோர் அனைவரும் துணை நிற்பர் என்று உறுதியாக நம்புகிறேன்.

தமிழகத்தில் இலஞ்ச ஒழிப்பு நடவடிக்கை

அரசு ஊழியர்கள் பலருக்குத் தண்டனை

சென்னை, ஜூன் 12—

சென்ற மார்ச் இறுதியுடன் முடிந்த காலாண்டில், இலஞ்சக் குற்றச்சாட்டுகளுக்காக, துணைக் கருவூலர் இருவர்—போலீசு சப்-இன்ஸ்பெக்டர்கள் இருவர்—கான்ஸ்டபிள்கள் எண்மர்—அரசு உதவி நிறுவனத்திற்கான மாவட்டத் தணிக்கையாளர் ஒருவர்—தொழில் துறையைச் சேர்ந்த மேற்பிரிவு எழுத்தர் ஒருவர்—துணைப் பதிவாளர் ஒருவர்—மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த காவலாளி ஒருவர்—தோட்ட வேலைச் சிப்பந்தி ஒருவர் ஆகியோர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.

தலைமைக் கான்ஸ்டபிள்கள் மூவர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். ஒரு போலீசு இன்ஸ்பெக்டருக்கும், இரண்டு தலைமைக் கான்ஸ்டபிள்களுக்கும், இரண்டு கான்ஸ்டபிள்களுக்கும், ஒருதுணைப் பதிவாளருக்கும் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டது.

மாவட்டச் சுகாதார அதிகாரி ஒருவருக்கு நீதிமன்றத்தில் ஓராண்டுக் கடுங்காவலும் ரூ. 50 அபராதமும் விதிக்கப்பட்டன.

ஐந்து கான்ஸ்டபிள்களின் சம்பளத்தில் இரண்டாண்டுக் காலத்திற்கு இரண்டு கட்டம் குறைக்கப்பட்டது.

ஒரு தலைமைக் கான்ஸ்டபிளுக்கும், மூன்று கான்ஸ்டபிள்களுக்கும் சம்பளத்தில் ஒரு கட்டம் குறைக்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றிப்பு விரிவு அதிகாரி ஒருவருக்கு, ஊராட்சி மன்ற நிர்வாக அதிகாரியாக மூன்ருண்டுக் காலத்திற்குப் பதவி குறைக்கப்பட்டது,

ஒரு துணைப் பதிவாளருக்கு இரண்டாண்டுக் காலத்திற்கு ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டது.

கம்போஸ்ட் அபிவிருத்தி இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு இரண்டாண்டுகளுக்குச் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது.

பியூன் ஒருவருக்கு ஆறு மாதக் காலத்திற்குச் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது.

லே செக்ரடரி — பொருளாளர் ஒருவரும், உதவி சர்ஜன் ஒருவரும் கண்டிக்கப்பட்டனர்.

விரிவுபடுத்தப்படுகிறது ஒரு படி அரிசித் திட்டம்

அறிஞர் அண்ணு அறிவிப்பு

சென்னை, ஜூன் 16—

"உணவுப் பங்கீட்டுமுறை செயலில் உள்ள நகரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும், குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழகப்பட்டுள்ள பகுதிகளுக்கும் தமிழக அரசு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்தும்" என்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது :—

"உணவுப் பங்கீட்டுமுறை சட்டப்படி செயலில் உள்ள சென்னையிலும், கோயம்புத்தூரிலும் கடந்த ஒரு மாதமாக ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நகரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு இந்தத் திட்டம் முதலில் விரிவுபடுத்தும்; அடுத்து, உணவுப் பங்கீட்டுக் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ள பகுதிகளை இரண்டாகப் பிரித்து, ஒன்றன்பின் ஒன்ருக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

சென்னையிலும், கோவையிலும் 80 சதவீத மக்கள் உணவுப் பங்கீட்டுக் கடைகளில் அரிசி வாங்குவார்கள் என்று கருதப்பட்டது; ஆனல், 67 சதவீத மக்கள் உணவுப் பங்கீட்டுக் கடைகளில் அரிசி வாங்கியிருக்கின்றனர்; மற்றவர்கள், முதல்தர அரிசி வாங்கியிருக்கின்றனர். இதனல், தமிழக அரசு உணவுக்காகச் செலவழிக்கும் உதவித் தொகை சிறிது குறையும். ஆனல், மக்கள் அரிசி வாங்கும் நிலைமையை மாதம் தோறும் கவனித்துப் பார்க்க வேண்டும்.

ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடும் திட்டத்திற்கு உதவியளிக்கவேண்டும் என்று மத்திய அரசை, தமிழகம் தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருக்கும்.

படி அரிசித் திட்டத்தைச் செயல்படுத்த வட்டித் தொகையைத் சிறிது காலம் தள்ளிப் போடுமாறு கேட்டபோது, 'தமிழகத்திற்குக் கொடுத்தால் மற்ற மாநிலங்களின் அரசுகளும் உதவித் தொகை கேட்க முன்வரும்; மற்ற மாநிலங்களுக்கும் உதவித் தொகை அளித்தால், மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் பெரும் பள்ளம் விழும்' என்று மத்திய நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் கூறினர்.

மேலும் அமைச்சர் மொரார்ஜி தேசாய் கூறுகையில், 'இந்த ஆண்டு மழைப் பருவம் நன்கு அமைந்தால், தேவைப்படும் மாநிலங்களுக்குக் கோதுமை கொடுக்க மத்திய அரசால் முடியும்; அதனல், மத்திய அரசின் நிதி நிலையில் கொஞ்சம் சேமிப்பு இருக்கும்; அப்போது, ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தைச் செயல்படுத்தத் தமிழகத்தின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்' என்று கூறியிருக்கிறுர்.

அரிசி உண்பவர்களுக்கு எதிராக வேண்டுமென்றே ஒரு சார்பு காட்டப்படுவதாக நான் புகார் செய்யவில்லை. மத்திய அரசின் உணவுக் கொள்கை நிர்வாகத்தின் விளைவுகளினல் தமிழகத்திற்குப் பாரபட்சம் காட்டும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத்திலும் கோதுமை உண்பவர்களாக இருந்திருந்தால், கோதுமைக்குக் கிடைத்துள்ள உதவித் தொகை தமிழகத்திற்கும் கிடைத்திருக்கும்.

இப்போது 31.08 இலட்சம் மக்கள் வாழும் சென்னை, கோவை நகர்களில் படி அரிசித் திட்டம் செயலாகிறது. உணவுப் பங்கீட்டுக் குடும்ப அட்டை வழங்கியுள்ள பகுதிகளுக்கும், நகரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும்போது, 3.73 கோடி மக்கள் உள்ள தமிழகத்தில் 41 சதவீத மக்களுக்கு உணவுப் பங்கீட்டுக் கடைகளில் அரிசி வழங்கப்படும்."

பட்டணத்தில் பக்தவத்சலம்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"சபாஷ்! தாக்குதல் என்றுல் இப்படியல்லவா இருக்க வேண்டும்? அமைச்சராக இருந்தீர்களே — இப்படியெல்லாம் பேச முடிந்ததா? அல்லது, இப்போது அமைச்சராக இருக்கிறுர்களே —அவர்கள் கூட, எதிர்க் கட்சியாக இருந்த போது இப்படிப் பேசினர்களா?" என்று சிரிக்கும் பக்தர்கள் பாதி பேர்!

"கழக ஆட்சி பற்றி எதையும் பேச முடியவில்லையே" என்பதற்காக மட்டும், காமராசர் பேசாமல் இருக்கவில்லை ;— "பக்தவத்சலமே இப்படியெல்லாம் 'பேச' ஆரம்பித்த பின்னர், நமது 'பேச்சு' எடுபடுமோ, எடுபடாதோ" என்ற சந்தேகத்தினுலும் அவர், 'ஒதுங்கியிருக்க' முடிவு செய்திருக்க வேண்டும்!

ரொடீஷியா பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, எதிர்க் கட்சியாக இருக்கும் கன்சர்வேடிவ் கட்சியிலிருந்து ஒரு முன்னுள் அமைச்சர் போயிருக்கிறுர் — தலைமையமைச்சர் வில்சன் சார்பாக! இது, இங்கிலாந்தில்!

ஆனல், பட்டணத்து வீதிகளில் பக்தவத்சலம் நடத்தும் பிரவேசங்களிலோ ஒரே ஆரவாரம்—கரகோஷம்—ஹாஸ்யம்!

ஆண்டு அனுபவித்தும் பிரயோசனமில்லை ; எதிர்க் கட்சியில் இருக்கவும் தெரியவில்லை!

"இப்படியெல்லாம் பண்பில்லாத ஹாஸ்யத்துடனும், வீணன ஆரவாரத்துடனும் பலர் பேசியதால்தான், காங்கிரசு பதவி இழக்கவே ஒரு காரணமாக இருந்தது" என்பதை, பதவியில் இல்லாத காமராசர் உணர்ந்துகொண்டுவிட்டார்!

ஆனல், பதவியில் அதிக 'சர்வீசை'க்கொண்ட பக்தவத்சலம், இதனைத் தெரிந்து கொள்ளவில்லை!

கோமாளிகள் செய்யும் சேட்டைகள், காட்சிகளின் நேரத்திற்குத்தான் பயன்படும் — நினைவில் தங்குவதில்லை!

வேதனையில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு காங்கிரசுக்குப் பக்தவத்சலம், தனது பேச்சுக்களின் மூலம் 'சைட் லைட்' விளைவுகளைத் தான் கொடுக்கிறுர்!

பிள்ளைகளில் சில, 'வீட்டுக்கும் உதவாது—நாட்டுக்கும் பயன் படாது' என்றுல், பெற்றவர்களால் கழித்து ஒதுக்கப்படுவதுண்டு. இந்த வகையில் பக்தவத்சலம், மிகவும் ஒத்து வருகிறுர்!

சினிமாக் கம்பெனிக்காரர்களிடம் ஒரு பழக்கம் உண்டு. திடீரென்று நொடித்துப் போய்விட்டால் அதைச் சரிகட்டவும், எதிர்காலத்தில் சிறிது எழுந்து நிற்கவும் பயன்படுகிறவகையில் ஒரு குறுகிய காலத் தயாரிப்பை வெளியிடுவார்கள். விஷயம் தெரிந்த வட்டாரத்தினர், அதில் உள்ள குற்றங் குறைகளை 'சீரியசாக' எடுத்துக்கொள்ளமாட்டார்கள்!

1967-ல் ஏற்பட்டதன் விளைவாகவும், எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திக்கவும் நேரம் ஏற்படுகிற வகையில், தமிழ்நாடு காங்கிரசின் ஒரு அவசரத் தயாரிப்பு தான் இந்த முன்னுள் முதலமைச்சர்!

குற்றங்குறைகளை எல்லாத் தரப்பினருமே பொருட்படுத்தத் தேவையில்லை ; ஆனல் பக்தவத்சலமும், 'இதுதான் பொது ஜனத் தொடர்பு' என்று முடிவு கொண்டுவிடக்கூடாது!

அவரது பேச்சு, படிப்பவர்கள் சிரிக்கும்படியாக வேண்டுமானல், இருந்துவிட்டுப் போகட்டும் —பார்ப்பவர்கள் சிரிக்கும்படியாக அமைய வேண்டாம்!

—எஸ். ஆர்.

நியதி ஏதும் இல்லையாம்!

"ஆண்டுதோறும் நடத்தித்தான் ஆகவேண்டும் என்ற நியதி ஏதும் இல்லை; இப்போது உடனடியாகக் கூட்டித்தான் தீரவேண்டும் என்ற அவசரமும் இல்லை"

என்று பிரிட்டிஷ் மக்கள் சபையில், தலைமையமைச்சர் வில்சன், காமன்வெல்த் நாடுகள் கூட்டம் பற்றிக் குறிப்பிடும்போது அறிவித்திருக்கிறுர்.

காமன்வெல்த் நாடுகளின் கூட்டம் கடந்த செப்டம்பரில் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

'நம் நாடு'

நாளைய இதழில்

★

'அண்ணாவின் பட்ஜெட்--- ஒரு அரசியல் நோக்கு'

என்ற கட்டுரை இடம்பெறும்

நடக்க இருப்பவை

20--6--67

சென்னை 88-வது வட்டம்

மூவேந்தர் மன்றத் துவக்க விழா; இரவு 7-மணிக்கு தேனும் பேட்டை திருவள்ளுவர் சாலையில்; தலைவர்: ஜி. முனுசாமி; பேசுவோர்: ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., வ. புருடோத்தமன் எம்.சி., க. இளமதி. (இசை நிகழ்ச்சி அரங்கேற்றம்: சுந்தரம் குழுவினரின் 'நடந்ததும் நடப்பதும்'.

ஊதியக் குறைப்பால் ஏற்பட்ட மிச்சம்

முதலமைச்சர் அண்ணா தகவல்

"தமிழக அமைச்சர்கள் தங்கள் ஊதியத்தில் 50 சதவீதத்தைக் குறைத்துக் கொண்டிருப்பதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 54,000 அரசுக்கு மிச்சமாகும்" என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்ற மேலவையில் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது :-

"அவைத் தலைவர் தமது ஊதியத்தில் 50 சதவீதமும், துணை அவைத் தலைவர் தமது ஊதியத்தில் 30 சதவீதமும் குறைத்துக் கொண்டிருப்பதால் ஆண்டொன்றிற்கு அரசுக்கு ரூ. 7,800 மிச்சமாகும்.

"சட்டமன்ற உறுப்பினர்களின் ஊதியத்தையும் குறைப்பது தொடர்பாகப் பேச்சு இருந்து வருகிறது; ஆனால், அது பற்றித் திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வரவில்லை.

"இதுவரையில் எந்த அமைச்சரும் ஊதியம் வாங்கவில்லை."

மலேசியாவில் என். வி. நடராசன்



மலேசியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தி. மு. க. அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், திண்டுக்கல் மா. தங்கவேலர் ஆகியோர் பினாங்கு கொடிமலைக்குச் சென்றிருந்தபோது எடுத்த படம். 'தமிழ் முரசு' செய்தியாளர் ஜெய்லுதீன், இந்தோனேசியா சீனிவாசன், வி. ஆர். மூர்த்தி ஆகியோர் உடன் இருக்கின்றனர்.

சாதிபேதமற்ற சமுதாயம் உருவாக ஊக்கமளிப்பு

கலப்புத் திருமணம் செய்துகொள்வோருக்கு மதிப்பளிக்கத் தமிழக அரசு முடிவு

"பின்தங்கிய வகுப்பினர் மேம்பாட்டுக்கான திட்டங்களை நடத்தி வரும் அதே வேளையில், சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டியதன் அவசியத்தை நாம் மறந்துவிடலாகாது!

"'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறள்நெறியினின்றும் வழுவி—மரபழித்துக் கொண்டு பிளவுபட்டுக்கிடக்கும் தமிழக மக்களிடம் கப்பிக் கொண்டிருக்கும் சாதிப் பிடிப்பு நீக்கப்பட்டு, 'சமூக ஒருமைப்பாடு ஏற்பட்டாக வேண்டும்' என்ற கொள்கையிலே இந்த அரசு, பற்று மிகக் கொண்டிருக்கிறது என்பதனை அனைவரும் அறிவர்.

"இன்றைய பேதமும் பிளவும் நீங்கி, 'எல்லோரும் ஓர் குலம்—ஓர் நிறை' என்ற குறிக்கோள் வெற்றி பெற, 'கலப்புத் திருமணம் நடைபெற வேண்டும்' என்ற நோக்குடன், கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் மணமக்களுக்கு, அரசு தன் பாராட்டுதலைத் தெரிவிக்கும் முறையில் ஒவ்வோர் ஆண்டும் பாராட்டு விழா நடாத்தி, அவர்களுக்குப் பொற்பதக்கம் வழங்கி மதிப்பளிக்கும் திட்டத்தை மேற்கொள்ள இந்த அரசு தீர்மானித்திருக்கிறது. இதற்கான நாளும் இடமும், முறையும் அவ்வப்போது வகுத்துத் தெரிவிக்கப்படும்.

"இதற்காகக் குத்து மதிப்பாக ரூ. 10,000 கொண்ட தொகை, இவ்வாண்டு ஒதுக்க ஏற்பாடாகி இருக்கிறது."

பொருளாதாரத்தில் பின்தங்கியோர் 'சமூக நீதி' பெற்றிட வாய்ப்பு

'ஏழைகளுக்கு இலவசக் கல்லூரிக் கல்வி'--- முதலமைச்சர் அண்ணா அறிவிப்பு

"சென்ற இடைக்கால வரவு—செலவுத் திட்டத்தின்போது, புதுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கவேண்டுமென்று கேட்கப்பட்டதைக் குறித்து, வசதியுள்ளோர்க்கும்—இல்லாக்கும் இடையே வேறுபாடு ஒன்றைச் செய்தாக வேண்டுமென்ம்,இத்துறையிலே நிதி ஒதுக்கத்துக்குப் போட்டியிடும் பலவிதத் தேவை இனங்களை நாம் சிந்தையிற் கொள்ள வேண்டியுள்ளதென்றும் குறிப்பிட்டிருந்தேன்.

"நிதி விளைவுகளையும், ஏனைய விளைவுகளையும் ஆய்ந்த பின்னர், தமது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 1500-க்கும் அதற்குக் குறைந்தும் உள்ள மாணவர் அனைவருக்கும் கல்லூரிச் சம்பளம் செலுத்துவதினின்றும் முற்றிலும் விலக்கு அளிக்கவேண்டுமென அரசு முடிவு செய்திருக்கிறது.

"பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளோர், இதன் மூலம் சமூக நீதி பெற்றிட வழி செய்யப்பட்டிருக்கிறது.

"அரிசன வகுப்பினர்-பழங்குடியினர்—குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர்—மிகப் பின்தங்கிய வகுப்பினர்—பின்தங்கிய ஏனைய வகுப்பினர்-ஆகிய இவர்களைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்லூரிச் சம்பள விலக்குப் பெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டுக்கு ரூ. 2,000 ஆக இருக்கும்.

—1967-68-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில்

FACTORY SPACE FOR AGRO BASED INDUSTRIES

Available at Ambattur

A few factory sheds from 2,50 sq ft. to 6, 00 sq ft available at the Ambattur Industrial Estate for Food and Fruit Based Industries only.

Apply :—

Director of Industries and Commerce, Chepauk, Madras-5

Phone : 87606

'பொருட்களின் விலை குறைந்துள்ளன'

அமைச்சர் மதியழகன் தகவல்

சென்னை, ஜூன் 17—

"சோளம், தேங்காய் எண்ணெய், மிளகாய் போன்ற இன்றியமையாப் பொருட்களின் விலைகள் பெரும் அளவில் குறைந்திருக்கின்றன"

என்று சட்டமன்றத்தில் உணவுத் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"தி. மு. க. அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு கோவை மாவட்டத்தில் சில பொருட்களின் விலைகள் இறங்குமுகமாக இருக்கின்றன.

சென்னை நகருக்கு காவிரியாற்று நீர்

கூவம் ஆற்றைச் செப்பனிடும் திட்டம் துவங்கும்

சென்னை நகரின் குடிநீர்ச் சிக்கலை நிரந்தரமாக நீக்கவும், கூவம் ஆற்றினைத் துப்புரவு செய்யவுமான திட்டங்களை அறிவித்து அண்ணா அவர்கள் தமது நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது :—

சென்னை மாநகரில் நிறைவேற்றப்பட்டு வரும் நீர் வழங்கல், கழிவு நீர்த் திட்டங்களில் பெரும் இடையூறு ஏதுமின்றி நிறைவேற்ற ரூ. 1.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகருக்கு இப்போது நகரின் புறம்பேயுள்ள சத்தியமூர்த்தி சாகரம், சோழவரம் ஏரி, புழலேரி ஆகிய மூன்று நீர்த் தேக்கங்களிலிருந்து, குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து நாளொன்றுக்குத் சராசரி 30 மில்லியன் காலன் தண்ணீர் வழக்கமாக கிடைக்க வகை செய்யப்பட்டிருக்கிறதென்றாலும், இம்மா பெரும் பட்டினத்தின் வளர்ந்துவரும் மக்கட் தொகையின் தற்போதைய தேவைக்கும், எதிர்காலத் தேவைகளுக்கும் இது போதாது. இக்குறைந்த அளவு நீரும், நிலையாகக் கிடைக்குமென்று செப்புவதற்கில்லை.

மற்றும், வறட்சிமிக்க ஆண்டுகளில் நாளொன்றுக்கு 12 மில்லியன் காலன் தண்ணீர் கிடைப்பதும் அரிசி; இதனால் நகர மாந்தர்க்கு அடிப்படையான ஒரு வசதி மறுக்கப்படுவது ஒருபுறமிருக்க, நம்பிக்கையான நீர் வசதியின்மையால் இம்மாநகரிலும், அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் தொழில் வளர்ச்சி பெரிதும் தடைபடும்.

மாநகரிலும் அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் நீர் வசதியைப் பெருக்க வேண்டிய இன்றியமையாத் தேவையைக் கருதி, அரசு, சின்னாட்களுக்கு முன் சில திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியது—

பூண்டியிலிருந்து புழலேரிக்குத் தண்ணீர் வரும் வழியில் இழப்பு ஏற்படாமலிருக்க, காரைங் பூச்சுக் கால்வாய்களைக் கட்டுதல் ;

புழலேரி, சோழவரம் ஏரிகளில் இப்போது பாசனத்திற்குப் பயன்படுத்தி வரும் 550 மில்லியன் கன அடி தண்ணீரைச் சேமிக்கும் வகையில் அந்த ஏரிகளின் கீழுள்ள 7,500 ஏக்கர் ஆயக்கட்டு முழுவதையும் கைவசப்படுத்திக் கொள்ளுதல் ;

புழலேரி, சோழவரம் ஏரிகளின் முழு ஏரி மட்டத்தை (F T L) உயர்த்தி, கூடுதலாக 680 மில்லியன் கன அடி தண்ணீரைச் சேமிக்க வகை செய்தல் ஆகிய இத்திட்டங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

இப்போது நிறைவேற்றப்பட்டுவடும் இத்திட்டங்கள், நகரின் நீர் வேட்கையைத் தற்காலிகமாகத் தணிக்கும் தன்மை வாய்ந்தனவே தவிர, நிலைத்த தீர்வு காண்பதாய் இல்லை.

ஆகவே, காவிரியாற்றிலிருந்து நீரைக் கொணர்வதற்காக ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டுவரும் திட்டத்தை, இனியும் காலங்கடத்தாமல் மேற்கொள்ள வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது.

நடப்பு ஆண்டிலேயே இந்த முக்கியத் திட்டத்தைத் தொடங்கிவைப்பதற்கென, தற்போதைய வரவு-செலவுத் திட்டத்தில், ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலத்திற்கு முன்னரே எடுத்திருக்க வேண்டிய அரசின் இம்முடிவை, சென்னை மாநகரப் பெருமக்கள் வரவேற்பார்கள் என்பதில் எனக்குத் தினையளவும் ஐயமில்லை.

கூவம் ஆற்றைச் சீராக்கி—செவ்விய முறையில் மேனிலைப்படுத்த...!

இம்மாநகர மாந்தரின், மற்றுமொரு நீண்ட நாளைய குறை, தற்போதைய நிலையில், பொதுச் சுகாதாரத்திற்கே பெருங்கேடு சூழ்வதாய் உள்ள கூவம் ஆற்றினைச் சீராக்கிச் செவ்விய முறையிலே மேனிலைப்படுத்துவதாகும்.

1958-ல் நிறுவப்பட்ட உயர் அதிகாரத் தொழில் நுட்பக் குழு, கூவம் ஆற்றைக் கடல் நீரோட்டமுள்ளதாக்கி, நீர் வழிப் போக்குவரத்துக்கு ஏற்ப மேனிலைப்படுத்துவதற்குரிய செயற் குறிப்புக்களைத் தயாரித்திருந்தது; செயல்படுத்தாதிருந்த குறையினை உணர்ந்து, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதென இவ்வாறு முடிவெடுத்திருக்கிறது.

இத்திட்டத்திற்காகும் செலவு ஏறக்குறைய 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டது. இந்த ஆற்றின் கரைமருங்கில் உள்ள இடங்களை வெளவி (Encroach), அங்கே இப்போது வாழ்ந்துவரும் மக்களுக்கு மறுவாழ்வு வசதியளிக்கத் தேவைப்படும் நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும்.

ஆற்றோரத்திலுள்ள மனைகளை விற்பனை செய்வதன் மூலமாக இத்திட்டச் செலவின் பெரும் பகுதியை ஈடுசெய்ய முடியும்.

எனவே, இத்திட்டம் குறித்து அரசுக்கு ஆகும் செலவு மிகக் குறைவாகவே இருக்கும் என்பதை உணரலாம்.

இத்திட்டம், இரு நிலைகளில் நிறைவேற்றப்படும்; முதல் நிலையில்—இடம் வெளவியவர்களுக்கு(Encroachers)மறுவாழ்வளிக்கும் செலவு நீங்கலாக, இதற்கு ரூ. 32 இலட்சம் செலவாகும்.

ரூ. 56 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிற இதன் இரண்டாம் நிலை, பின்னர் மேற்கொள்ளப்படும்.

இவ்விரு நிலைகளும் ஐந்து ஆண்டுகளுக்குள் முடிக்கப்படும். நடப்பு ஆண்டிலேயே இத்திட்டத்தையும் தொடங்கி வைக்க, முதல் ஒதுக்கமாக ரூ. 5 இலட்சம் வேண்டப்பட்டுள்ளது.

சென்னைநகருக்குக் கெட்ட வாடையைப் பரப்பிக்கொண்டிருக்கும்கூவம் ஆறு, வசதியுள்ள சாதனமாகத் திருத்தி அமைக்கப்பட்டு, நகருக்குப் புது எழிலைத் தந்திடத்தக்க இத்திட்டத்தை அனைவரும் வரவேற்பர் என்று நம்புகிறேன்.

இத்திட்டங்களைத் தவிர, நகரில் மேம்பாலங்கள் கட்டுதல்—சாலைகளை மேனிலைப்படுத்துதல்——தெரு விளக்குகள் ஏற்றல்—அங்காடிகள் அமைத்தல் போன்ற பற்பல திட்டங்களுக்காக, மாநகராட்சிக்கு மொத்தம் ரூ. 76 இலட்சத்துக்குக் கடன்களும் மானியங்களும் வழங்க வகை செய்யப்பட்டுவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.